[1971 டிசம்பர் 4

ஓட்டப்பிடாரத்துக்கு வேளாண்மைப் பண்ணை

* 89 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஓட்டப்பிடாரத்தில் ஒரு விவசாயப் பண்ணை அமைக்க நடத்தப்பட்ட ஆராய்ச்சிக்காக செய்யப்பட்ட செலவு எவ்வளவு?

(இ) அச்செலவு, மாநில அரசைச் சேர்ந்ததா, அல்லது மத்திய அரசைச் சேர்ந்ததா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ரூபாய் 34,568-20 (ரூபாய் முப்பத்து நாலாயிரத்து ஐநூற்று அறுபத்தெட்டு, பைசா இருபது) செலவாகி இருக்கிறது.

(இ) புது டில்லி அரசுப் பண்ணை நிறுவனம் கோரியபடி நடத்தின நீர்வள ஆராய்ச்சிக்காக ஏற்பட்ட செலவை அந்நிறுவனம் ஏற்றுக் கொள்ள இசையவில்லை. எனவே, அந்தச் செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அரூருக்கு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

* 90 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தருமபுரி மாவட்டத்தில் துவங்க இருக்கும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை அரூரில் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அண்மையில், தர்மபுரி மாவட்டத்தில் ஒரு மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆராய்ச்சி நிலையத்தை அமைக்கத் தகுதியான இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திருப்பூர் நகராட்சியில் சலவைத் துறை

* 91 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருப்பூர் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து திருப்பூர் நகராட்சிக்கு "டோபிகானா" கட்ட நிதி கேட்டு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?